1981 மே 14]

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, வட சென்னையிலே இருக்கின்ற ஸ்டான்லி மருத்துவமனையிலே குழந்தைகளுக்கான ஒரு பிரிவு ஏற்படுத்துவதற்கு திட்டமிடப் பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்திருக்கிறேன். ஆனால் இப்போது எழும்பூர் மருத்துவமனையிலே நவீனக் கருவிகள் இல்லை என்ற புதிதான தகவலைத் தருகிறார்கள், குழந்தைகளுக்குத் தேவையான அத்தனை நவீனக் கருவிகளும் அதாவது என்னென்ன கருவிகள் வேண்டுமோ அவை அத்தனையும் அங்கே இருக்கின்றன. தென் இந்தியாவிலேயே மிகச் சிறப்பாக நடந்து வரும் மருத்துவமனை அது என்று அத்தனை பேரும் பாராட்டக் கூடியதாக இந்த மருத்துவமனை இருக்கின்றது. டாக்டர்களுடைய எண்ணிக்கையை உயர்த்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதை கவனிக்கிறோம்.

அவினாசியில் அரசு மருத்துவமனை அமைக்கும் திட்டம்.

*வினா எண். 1039 திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கோவை மாவட்டம் அவினாசியில் அரசு மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு தொகையில் எத்தனை படுக்கை வசதிகளைக் கொண்டதாக இருக்கும்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) கோவை மாவட்டம் அவினாசியில் ஆரம்பச் சுகாதார நிலையத்தை மருத்துவமனையாக மாற்றும் வேண்டுகோள் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து வந்துள்ளது.

(ஆ) மாவட்ட மருத்துவ அலுவலர் உரிய விதிமுறைகளின்படி செயற்குறிப்பு அனுப்பும்படி கேட்கப்பட்டுள்ளார்.

திரு. எம். ஆறுமுகம் : தலைவர் அவர்களே, அவிநாசித் தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதியாக மட்டுமல்லாமல் கிட்டத்தட்ட 3 இலட்சம் மக்கள் தொகை கொண்ட ஒரு தொகுதியாகவும் இருந்து வருகின்றது. அங்கே பிரைமரி ஹெல்த் சென்டரைத் தவிர வேறு மருத்துவமனை இல்லை. ஆனால் இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாவட்ட ஆட்சித்தலைவரிடமிருந்து செயற்குறிப்பு வந்திருப்பதாகச் சொன்னார்கள். எவ்வளவு மதிப்பீட்டிலே அதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. அந்த மருத்துவமனையைக் கட்டி முடிப்பதற்கு எவ்வளவு அவகாசம் எடுத்துக் கொள்ளப்படும்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, இப்போது அதுபற்றி அறிவிப்பதற்கு முடியாத நிலையிலே இருக்கிறோம். ஏன் என்றால் இன்னும் ஆரம்ப நிலையிலேதான் இருக்கின்றது.

District Development Council in its meeting held on 21-3-1980. அன்றுதான் அரசாங்கத்திற்கு ஒரு கடிதத்தை எழுதி அதுபற்றி பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள் அதாவது மார்ச் மாதம். ஆகவே இதுபற்றி ஆரம்ப நிலையிலே தான் இருக்கிறோம். இதற்கு எவ்வளவு மதிப்பீடாகும், எத்தனை காலத்திற்குள் செய்து முடிக்கலாம் என்பதெல்லாம் இன்னும் சிந்திக்க வேண்டிய கட்டத்திலே தான் இருக்கிறோம்.

திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள், இப்பொழுதுதான் திட்டத்திற்கான ஆரம்பக் கட்டத்தில் இருப்பதாகச் சொன்னார்கள், கிட்டத்தட்ட அந்த தொகுதியில் இருக்கிற மக்கள் எல்லாம் ஒரு ஆக்ஸிடெண்ட் ஆனால் கூட போஸ்ட் மார்ட்டம் செய்ய வேண்டுமானால் கோவைக்கு அல்லது திருப்பூருக்குச் செல்ல வேண்டிய நிலைமைதான் இருக்கிறது. அதுவும் அல்லாமல் அது ஒரு தாலூக்கா மையமாக இருப்பதினால் அவசர அவசியமாக அந்த பிரைமரி ஹெல்த் சென்டரை, ஒரு தாலூக்கா மருத்துவ மனையாக கட்டிக் கொடுப்பதற்கான நடவடிக்கையை அமைச்சர் அவர்கள் உடனடியாக எடுக்க முன் வருவாரா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற அந்த திட்டத்திற்காகத்தான் டிஸ்டிரிக்ட் மெடிகல் ஆபீசரை, உடனடியாக அங்கே போய் பார்த்து, என்னென்ன செய்ய வேண்டும், எப்படி திட்டங்கள் போட வேண்டும், என்னென்ன வாங்க வேண்டும் எப்படி அமைக்கலாம் என்பது பற்றி எல்லாம் ஆராய்ந்து அனுப்ப வேண்டும் என்று கடிதம் மூலமாக கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். தொலைபேசி மூலமாக வேண்டுமானால் சொல்லி, நடவடிக்கையை துரிதப்படுத்தலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னிடத்திலே நேரிடையாக கூட இந்தப் பிரச்னையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போல அந்த இடத்திலே ஒரு தாலூக்கா மருத்துவமனை தேவை என்பதை அரசும் உணர்ந்திருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்தின் அடிப்படையில் செயலாற்றிக் கொண்டு வருகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்வர் விசாரணை கமிஷன் முடிவுகள்.

குறுகிய காலவினா எண். 21திரு. கு. ரமணி: மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—